செ.வெ.எண். 44/2018 நாள். 26.01.2018

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் நடைபெற்ற குடியரசுத் தின விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 121 பயனாளிகளுக்கு ரூ.2.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற குடியரசுத் தின விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்ட காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய தலைமை காவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கத்தை 37 தலைமை காவலர்களுக்கு வழங்கினார். இந்திய திருநாட்டின் சுகந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளை பொன் ஆடை அணிவித்து கௌரவித்தார்.

முன்னாள் படைவீரர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தாட்கோ, வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை, நகர்புற நிலவரித்திட்டம், மாவட்ட தொழில் மையம், ஊரக வளர்ச்சித்துறை, மாவட்ட திட்ட அலுவலகம், வட்ட வழங்கல்த்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 121 பயனாளிகளுக்கு ரூ.2.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 32 பத்திரிகையாளர்களுக்கு 5.78 லட்சம் மதிப்பிலான வீட்டு மனைப்பட்டாக்கான ஆணையினை வழங்கினார். பள்ளி மாணவ-மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ-மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பரிசு வழங்கி பாராட்டுதல்களை தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழையின்போது சிறப்பாக பணிபுரிந்த தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் அலுவலர்கள், கண்காணிப்பு அலுவலர்களுக்கு உறுதியாக இருந்த வட்டாட்சியர்கள், பக்கிங்காம் கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிய வட்டாட்சியர் மற்றும் குழுவினர், சிறப்பாக பணிபுரிந்த 23 குழுக்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வடகிழக்கு பருவமழையின் போது உறுதுணையாக இருந்த துறையினர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மண்டல அலுவலர்களை சிறப்பாக ஒருங்கிணைத்து பணிபுரிந்த 13 துணை ஆட்சியர்களுக்கும் மற்றும் ISO தரத்சான்று பெற்ற மண்ணிவாக்கம், சாத்தான்குப்பம், ஜமீன்பல்லாவரம், கிளார் போன்ற 4 அங்கன்வாடி மையங்களுக்கும் பாராட்டி விருதுகள் வழங்கப்பட்டது. மேலும் 2015-16ஆம் ஆண்டில் குடும்பநலத் துறையில் சிறப்பாக குடும்ப நல அறுவை சிகிச்சை செய்த 5 மருத்துவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படும் அலுவலகங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆதரவற்ற நிலையில் மரணம் அடைந்தவர்களை நல்லடக்கம் செய்த திரு.சீனுவாசன் அவருக்கு சிறந்த சமூக சேவையாளராக பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது காவல் துறை சரக துணைத் தலைவர் திருமதி.தேன்மொழி இ.கா.ப., மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு.சந்தோஷ் ஹதிமணி இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயகுமார், சார் ஆட்சியர்கள் திரு.கில்லி சந்திரசேகர் இ.ஆ.ப., திரு.ஜெயசீலன் இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.சந்திரசேகர், திரு.ராஜூ மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், மாணவ-மாணவியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.